# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்

## 03.09.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் அன்கபூத் -ன் 70 வது வசனத்தை ஓதினார்கள்:**

**பொருள்: நம்மை சந்திக்க முயற்சி செய்பவர்களை நிச்சயமாக நாம் நம்முடைய வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29 : 70)**

இப்போது நாம் ரமலான் மாதத்தின் கடைசி 10 நாட்களைக் கடந்து கொண்டிருக்கிறோம். முஸ்லிம்கள் எல்லாரும் நன்கு அறிந்திருப்பது போல் இது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான மாதமாகும். அதிலும் இந்த 10 நாட்கள் மிகவும் பிரசித்திப் பெற்றதாகும். இதில் லைலத்துல் கத்ர் என்ற ஓர் இரவு தோன்றுகிறது. கடந்த குத்பாவில் இது தொடர்பாக விளக்கமாக எடுத்துரைத்தேன். அதே போன்று இறைவனின் பார்வையில் இன்றைய நாளும் மிகவும் அருளுக்குரிய நாளாகும். அதாவது ஒவ்வொரு ஏழாவது நாளும் இறைவனின் முழுமையான கருணையையும் அருளையும் ஏந்தியவாறு ஜுமுஆ நாள் வருகிறது. இந்த நாளன்றும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறப்பான ஒரு தருணம் வருகிறது. இவ்வாறு இவ்வனைத்து அருள்களும் இந்நாளில் ஒன்றுகூடியுள்ளது. இறைவன் தனது நல்லடியார்களின் மீது காட்டும் பரிவையும் அன்பையும் இது நமக்கு உணர்த்துகிறது. நமக்கு ஏற்படும் இந்த உணர்வு தற்காலிக உணர்வாக இருக்கக் கூடாது. மாறாக நான் ஓதிய வசனத்தில் இறைவன் கூறியுள்ள நிலையான மன உறுதியோடு நாம் பணியாற்ற வேண்டும்.

இறைவனைத் தேடுவதில் கடின உழைப்பு வெற்றி அடைந்து விட்டால் இறைவனின் நெருக்கம் கிடைத்து விடுகிறது. இதன் மூலம் மனிதனின் வாழ்க்கையை தலைகீழாக மாற்றி விடுகிறது. எவ்வாறு நமது உழைப்பு வெற்றி பெறும்? இவ்வசனத்தில் இறைவன் இந்தக் கருத்தை விளக்குகிறான். நீங்கள் நிரந்தர மனப்பான்மையோடு எம்மை சந்திக்க விடாமுயற்சி செய்து வாருங்கள் என்று இறைவன் கூறுகிறான். இறைவனோடு சந்திப்பு கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து முயற்சி செய்து வருவதால் இறைவனுக்கு விருப்பமான பணிகளைச் செய்வதும் அவசியமாகிறது. இவ்வாறு இறைவனுக்கு விருப்பமான பணிகளைச் செய்து வருவது இறைநெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது.

இறைவன் தன்னுடைய கருணையால் மனிதனுக்கு இறைவன் பக்கம் விரைந்து செல்வதற்கான ஒரு உத்வேகத்தை வழங்குகிறான். இந்த ரமலான் மாதம் நாம் செய்கின்ற முயற்சிக்கும் உழைப்புக்கும் நல்ல வாய்ப்பு வழங்கி வருகிறது. ரமலான் மாதத்தில் நோன்பும் பிற இபாதத்துகளும்கூட மிகவும் கடின உழைப்பே ஆகும். இதன் அசல் தத்துவத்தைப் புரிந்து கொண்டு அதனை பேணி நடந்தால் இந்த உழைப்பு இறைவனின் பக்கம் நம்மை அழைத்துச் செல்லும். எனவே இந்த ஆன்மீக சூழ்நிலையின் மூலம் நாம் பயனடைந்தவாறு இறைவனின் விருப்பத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றுக்களை முன் வைத்து இறை விருப்பத்தை அடைவதற்கான வழிகள் யாவை? இந்த வழிகளை அறிந்த பின் அதை எப்படி செயல்படுத்துவது? இதன் மூலம் இறைவனை எப்படி அடைவது? இறைவன் தன்னை நோக்கி வருகின்ற மக்களை முஹ்ஸினீன் (நன்மை செய்பவர்கள்) என்று கூறி நமக்கு நற்செய்தியும் வழங்கியுள்ளான். நற்செயல்கள் செய்து அதில் நிலைத்திருப்பவர்களோடு நான் இருக்கிறேன் என்று கூறுகிறான். நிச்சயமாக அல்லாஹ் நல்லவர்களுடன் இருக்கிறான். இதை நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விளக்கத்தின் ஒளியில் தற்போது

பார்க்கலாம். இதனால் நாம் இறைவனின் வழிகளை அடையலாம். அப்போது இறைவனோடு எப்போதும் சேர்ந்து இருக்கிற மக்களோடு நாமும் இருக்கலாம்.

முன்னதாக நான் ஓதிய வசனத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் பல கோணங்களில் விளக்கம் தந்துள்ளார்கள். மனிதர்களுள் ஒவ்வொருவரின் திறமையும் வெவ்வேறானதாக உள்ளது. ஒவ்வொருவரின் சிந்தனையும் வேறுபடுகிறது. இறைவன் ஒவ்வொருவரின் திறமைகளையும், சக்திகளையும் வெவ்வேறாக நிர்ணயித்துப் படைத்துள்ளான். எனவே யார் யாருக்கு எவ்வளவு திறமை, சக்தி உள்ளதோ அதற்கேற்ப இறைவனைத் தேட வேண்டும் என்பதுதான் இறைவனின் கட்டளையாகும். இவ்வாறு நீங்கள் செயல்பட்டால் இறைவன் உங்களுக்கு தன் பக்கம் வருகின்ற வழியைக் காட்டுவான். ஆனால் இறைவன் தந்த திறமைகள் அனைத்தையும் முழுமையாக இவ்வழியில் பயன்படுத்துவதை நமது சிந்தனை தடுத்து விட்டால், மனிதனின் நஃப்ஸ் பல சாக்குப்போக்குகளைத் தேடினால், சின்னச் சின்ன முயற்சியை கடும் உழைப்பு என்று எண்ணினால் இறைவனை அடைய முடியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஒரு மனிதன் மிகவும் கவனக்குறைவோடு சோம்பேறித்தனத்தையும் காட்டினால், தனது முழு ஆற்றலையும் அறிவையும் திறமைகளையும் பயன்படுத்தி இறைவனின் விருப்பத்தைத் தேடுபவர் பெறுகின்ற நன்மைகளை எப்படி பெறுவார்? எனவே தூய்மையான உள்ளத்தோடு இறைவனைத் தேடுபவர்தான் அவனை அடைய முடியும். இறைவனின் நெருக்கத்திற்கு பல படித்தரங்கள் உள்ளன. விடா முயற்சியால் இறைவனின் அருளைப் பெறுவது மட்டுமே மனிதனுக்கு இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது. எனவே இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்கு அவனை அடைவதற்கு இறைவன் கூறிய வழிகளின்படி செயல்படுவது அவசியமாகும். அல்லாஹ்வின் மீதும் மறைவானவற்றின்மீதும், அவனுடைய வல்லமை மற்றும் சிறப்புப் பண்புகள் ஆகியவற்றின் மீதும் முழுமையான ஈமான் கொள்வது விடாமுயற்சி செய்வதற்கு இன்றியமையாதவையாகும். அல்லாஹ்வை அறிவாற்றலினால் மட்டும் கண்டுபிடிக்க முயற்சி செய்தால், இறைவன் ஒருபோதும் தென்படமாட்டான். தன் பக்கம் வருகின்ற வழியைக் காட்டமாட்டான். அல்லாஹ்வை அடைவதற்கும் அவனுடைய வழிகளைத் தேடுவதற்கும் முதல் முயற்சி மனிதன் தான் செய்ய வேண்டும். இதை அடையாளம் காட்டும் வழிகளை விட்டு இறைவன் மனிதனை இருளில் வைக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகையில் இருந்து கியாமத் நாள் வரை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையும் திருக்குர்ஆனும் நம்முன் உள்ளன. அதிலிருந்து இறைவனை அடையும் வழியைத் தேடிக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னரும் இறைவன் நபிமார்களின் மூலம் மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளான். நபிமார்களின் மூலம் அடையாளங்களும், அற்புதங்களும் வெளிப்படுகின்றன. இதன் மூலம் இறைவன் தன்னுடைய இருப்பின் ஆதாரத்தை வழங்குகின்றான். இதனைக் கொண்டு இறைவனை அடையும் வழிகளை அறிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்தை விளக்கியவாறு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

யார் நம்முடைய வழியில் கடுமையாக உழைப்பாரோ அவருக்கு நமது வழியைக் காட்டுவோம் என்று இறைவன் கூறுகிறான். இது இறைவனின் வாக்குறுதியாகும். இவ்வாறு வாக்குறுதி அளித்த இறைவன் நமக்கு ஒரு துஆவும் கற்றுத் தருகிறான். அது **இஹ்தின்ஸ் ஸிராத்தல் முஸ்தகீம்** – இறைவா எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்ற துஆவாகும். இதை கவனத்தில் கொண்டு ஒவ்வொரு தொழுகையிலும் மிகவும் உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். இறைவனின் பாதையில் முன்னேறுபவர்கள் மற்றும் அவனை அறிந்து கொண்டவர்கள் ஆகிய மக்களுடன் நாமும் இருக்க வேண்டும் என்று உளப்பூர்வமாக விரும்ப வேண்டும். இவ்வுலகை விட்டு குருடராக எழுப்பப்படக் கூடாது.

ஆக இந்த துஆவை நாம் எல்லா தொழுகையிலும் ஒவ்வொரு ரக்அத்திலும் ஓதி வருகிறோம். அதை சிந்திக்க வேண்டும். மிகவும் வேதனையோடும், உருக்கத்தோடும் இறைவனிடம் நாம் நேர்வழியை வேண்டினால் இறைவன் வழிகாட்டுவான். முன்னதான நான் கூறினேன். இறைவனின் நபிமார்களும் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அடையாளங்களைக் கொண்டு வருகின்றனர். இதன் மூலம் இறைவனின் வழியைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று மக்களுக்கு கவனமூட்டுவதற்காக வருகின்றனர். ஒருவர் ஒரு வேலையைச் செய்வதற்கு கவனமூட்டும் போது மற்றவர் அதை மதித்து அதன்படி செயல்பட்டு பலன் பெறுகிறார் என்றால் கவனமூட்டியவருக்கு நன்றி கூறி அவரோடு தொடர்பை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே அறிவுடைமையாகும். அப்போதுதான் இன்னும் அதிக பலனைப் பெற முடியும். இந்தக் கருத்தைப் புரிந்து கொண்டர் வெற்றி அடைவார்.

இறைவனின் நபிமார்கள் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இறைவனை அடையும் வழிகளை அடையாளம் காட்டுகின்றனர். அவ்வாறு அவர்கள் வழிகாட்டும் போது அறிவுடைய ஒவ்வொருவரும் அந்த நபிமார்களோடு சேர்ந்து தூய்மை மற்றும் விசுவாசம் ஆகிய உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்த வேண்டும். இவ்விஷயத்தில் அந்த நபிமார்கள் முதல் உரிமையாளர் ஆகின்றனர். இக்காலகட்டத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மஸீஹ் மஹ்தி தோன்றுவார் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அவர் இறை அடியார்களுக்கு இறைவனோடு தொடர்பை ஏற்படுத்த வந்தவர் ஆவார். எனவே அவர் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இதற்காக செய்ய வேண்டிய துஆ முஸ்லிம்களுக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் இந்த துஆவை தொடர்ந்து செய்து கொண்டும் இருக்கின்றனர். எனவே எதையுமே சிந்திக்காமல் கண்மூடித்தனமாக மறுப்பதற்குப் பதிலாக மஸீஹ் மவ்வூதை ஏற்றுக் கொண்டு இறைவனை அடைகின்ற வழியை சற்று பரிசோதித்துப் பாருங்கள்.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள்** ஓரிடத்தில் கூறும்போது இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் முஸ்லிமல்லாதவர்களுக்கும் பலமுறை இந்த துஆவை செய்யுமாறு கூறியுள்ளேன். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் – எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்ற துஆ கற்றுத் தரப்பட்டுள்ளது. இதனை நேரடியாக கூற முடியாவிட்டால் எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக என்று (தமது தாய்மொழியிலாவது) துஆ செய்யுங்கள் என்று கூறியுள்ளேன். அப்போது அம்மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மை வெளிப்பட்டது. சில முஸ்லிம் அல்லாதவர்கள் உலகாதாயத்தைக் கருத்தில் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இந்த துஆவை செய்யும் போது உண்மை வெளிப்பட்டு விடுகிறது.

முஸ்லிம்கள் குறிப்பாக இதனை சோதித்துப் பார்க்கட்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் கோபத்தை தூண்டுவதற்குப் பதில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுகிறோம். மேலும் அல்லாஹ்வின் பக்கம் எடுத்துச் செல்கிற புதிய வழிகளும் அதனால் திறக்கும்.

இதுவே அஹ்மதிகளாகிய நமக்கும் தேவை. நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வெறுமனே பைஅத் செய்து விட்டு அமர்ந்திருந்தால் போதாது.

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்காக தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக இந்த சில நாட்களில் மிகவும் கவனம் செலுத்துங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்கள் உள்ளங்களின் நிலையை அல்லாஹ் நன்றாக அறிந்துள்ளான். நீங்கள் ஸாலிஹ் – நல்லடியார் ஆக இருந்தால் அவன் தன் பக்கம் குனிபவர்களை மன்னிப்பவன் ஆவான்.

நீங்கள் களங்கமற்ற முறையில் அவனின் திருப்தியை நாடினால் அவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். தனது வாக்குறுதிக்கேற்ப தன் பக்கம் வருவதற்கான ஒளி பொருந்திய வழியைக் காட்டுவான். மேலும் மேலும் தகுதி உயர்ந்து கொண்டே செல்லும். இவ்வாறு தன்புறம் வர முயற்சி செய்பவர்களுக்கு வழிகாட்டுவதாக அவன் வாக்களித்திருப்பது போன்று அல்லாஹ்வை விட்டு தூர விலகிச் செல்பவர்களோ இருளில் வீழ்ந்து கொண்டே செல்கின்றனர். அல்லாஹ் இதனைப் பற்றி திருக்குர்ஆனில் கூறுகிறான்.

**அவர்கள் (நேரான பாதையிலிருந்து) விலகியபோது, அல்லாஹ்வும் அவர்களின் உள்ளங்களை விலகச் செய்து விட்டான். மேலும் கட்டுப்படாத மக்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை. (61:6)**

**இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

உலகியல் வாழ்வில் நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு இருக்கிறது. அவ்விளைவே இறைவனில் செயலாகும். அதே போன்று இவர்களைப் பற்றியும் அல்லாஹ் இரு உதாரணங்கள் மூலமாக தெளிவாக விளக்கியுள்ளான்.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

எவர் நம்மை அணுகுவதற்காக முழு மூச்சாக முயற்சி செய்வாரோ அவருடைய விஷயத்தில் கண்டிப்பாக நல்ல விளைவு கிடைக்கும். எவர் அசுத்தமான வாழ்வை மேற்கொள்வாரோ அதன் விளைவாக அவரது உள்ளம் அசுத்தமாகி விடுகிறது. தன்னை இறைவனை விட்டு விலக்கிக் கொள்வது அடியாரின் துர்பேறாகும். சில நாட்களுக்கு முன் ஜமாஅத் அல்லாத நமது நண்பர் ஒருவர் பாகிஸ்தானிலிருந்து வந்திருந்தார். நமது நாட்டில் நடக்கிற இந்த அசம்பாவிதங்களுக்கு என்ன காரணம்? என்று கேட்டார்.

இரண்டு விஷயங்கள் உள்ளன. அதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஒன்று, என் பக்கம் வாருங்கள்; முயற்சி செய்யுங்கள்; கடினமாக அதற்காக உழையுங்கள் என்று நான் கூறினேன்.

எனது திருப்தியைப் பெறுவதற்காக எல்லா வழியிலும் உயிரைக் கொடுத்து முயற்சி செய்யுங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

இதற்கு தலைகீழான நிலை தான் காட்சி அளிக்கிறது என்று அவர் கூறினார்.

தலைகீழாகத்தான் காட்சி தென்படுகிறது எனில் அல்லாஹ்வின் புறமிருந்து இன்னொரு எதிர்விளைவு தான் வெளிப்படும்.

எனவே சமுதாய அளவிலும் நமது சிந்தனையையும் பார்வையையும் சரியாக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்தை விரும்புகிற பாகிஸ்தான் சமுதாயம் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இக்காலத்திலுள்ள அனைத்து மீடியாக்களும் பாகிஸ்தானிலும் சரி; வெளியிலும் சரி கூச்சலிடுகின்றன. நிறைய பேசுகின்றனர். அதன் அதிக விளக்கங்களைக் கூறிவிட்டனர். அதனை கூறவே தேவையில்லை. அநீதி நிரம்பி வழிகிறது. அதனைக் களைய எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அல்லாஹ்(தான்) கருணை காட்ட வேண்டும்!

நல்லியல்பு கொண்டவர்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்துகொள்கிறான் என்று விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மனித உள்ளத்தில் பலவகையான நிலைமைகள் உள்ளன. கடைசியில் நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் பலவீனங்களை அல்லாஹ் அகற்றுகிறான். தூய்மை, நன்மை செய்வதற்கான ஆற்றல் ஆகியவற்றை தனது அன்பின் வெளிப்பாடாக தன் புறமிருந்து வழங்குகின்றான்.

பிறகு அல்லாஹ்வின் பார்வையில் அருவெறுக்கத்தக்க அனைத்தும் இவர் பார்வையிலும் அருவறுக்கத் தக்கதாக ஆகிவிடுகின்றது.

அல்லாஹ் தூய்மையையும் நன்மையையும் வழங்கும்போது இது நடைபெறுகிறது. அவரது முயற்சியால் செய்த சிறிய காரியத்திலும் அவன் பரக்கத்தை வழங்குகிறான். பிறகு இறைவனுக்குப் பிரியமான எல்லா விஷயங்களும் இவருக்கு பிரியமானதாக ஆகி விடுகின்றன. அவருக்கு ஒரு ஆற்றல் கிடைக்கிறது. அதன் பிறகு பலவீனம் ஏற்படுவதில்லை. அவருக்கு ஓர் ஆர்வம் வழங்கப்படுகிறது. அதன் பிறகு சோர்வு ஏற்படுவதில்லை. ஒரு தக்வா வழங்கப்படுகிறது. அதற்கு பிறகு பாவம் உண்டாவதில்லை. அவரிடம் ரப்பே கரீம் திருப்தி அடைகிறான். அதன் பிறகு அவரிடம் தவறு ஏற்படுவதில்லை. ஆனால் இந்த நிஃமத் மிகவும் தாமதமாக கிடைக்கிறது. மனிதன் முதன்முதலில் தமது பலவீனத்தால் தடுமாறுகிறான். கடைசியில் அவன் உண்மையாளன் என்பதை அறிந்து ஆற்றலுள்ள இறைவனை ஈர்த்துக் கொள்கிறான்.

அந்த ஆரம்ப நிலையில் மனிதன் தடுமாறுகிறான். பிறகு மீண்டும் இறைவன் பக்கம் வருகிறான். பிறகு மீண்டும் விலகுகிறான். உலகம் தன் புறம் ஈர்க்கிறது. பிறகு உலகை விட்டு விட்டு அவன் மீண்டும் இறைவன் பக்கம் போகிறான். இவ்வாறு தொடர்ந்து முயற்சி நடைபெறுகிறது. இவ்வாறு அவன் தொடர்ந்து முயற்சி செய்வதை இறைவன் பார்க்கிறான். பிறகு அல்லாஹ்வாகிய உயர் சக்திவாய்ந்தவன் தன் பக்கம் ஈர்த்துக் கொள்கிறான். இதனைக் குறித்து தான் வல்லமைமிக்க இறைவன் கூறுகிறான்.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

இது ஒரு நிரந்தரமான நீண்ட முயற்சியாகும். அதன் மூலம் அவரது தக்வா முழுமையடைகிறது. உறுதியான பாதம் கிடைக்கிறது. அல்லாஹ்வுடைய அன்பு மற்றும் இறைஞானத்தின் வழி திறக்கிறது. நன்மை செய்வதற்கும் கவனம் ஏற்படுகிறது. இது அல்லாஹ்வுடைய வாக்குறுதியாகும். இன்னோரிடத்தில் இந்த வசனத்தை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

எல்லா நிலைகளும் முயற்சியின் மீதே அமைக்கப்பட்டுள்ளன. முயற்சி இல்லாமல் எதுவுமே நடக்காது.

ஸய்யிது அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் ஒரே பார்வையில் ஒரு திருடனை இறைநேசராக்கி விட்டார்கள் என்று கூறுகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள் தடுமாறியுள்ளனர். இதுபோன்ற பேச்சுகள்தான் மனிதனை அழித்து விட்டன. ஒரு தடவை ஊதுவதால் தூய்மை பெற்று விடலாம் என்று நினைக்கின்றனர்.

முஸ்லிம்கள் கபருகளுக்குப் போகின்றார்கள். பீர்களிடம் போகின்றார்கள். தஃவீஸ் வாங்கி வருகின்றனர். தமது பிரச்சனைகளுக்கு தீர்வு தேடிச் செல்கின்றனர். அவர்களுடைய கருத்துப்படி தொழுதாலும் தொழாவிட்டாலும் அவர்களது எல்லா பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எவர்கள் இறைவனிடம் அவசரப்படுகிறார்களோ அவர்கள் அழிந்துபோய் விடுவர். உலகின் ஒவ்வொரு முன்னேற்றமும் படிப்படியாகவே நடக்கும். ஆன்மீக முன்னேற்றமும் அப்படித்தான் நடக்கும். கடின உழைப்பின்றி எதுவும் நடக்காது. கடின உழைப்பு என்பது கூட இறைவனில் மாய்ந்து போனவாறு செய்ய வேண்டும். அதுவன்றி திருக்குர்ஆனுக்கு மாற்றமாக பயனற்ற தலைமைத்தனத்தை நாடி யோகிகளைப் போன்று அமர்வதன்று. இதற்காகவே இறைவன் என்னை நியமித்தான். மனிதன் எவ்வாறு அல்லாஹ் வரை சென்றடைய முடியும் என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்காக நியமித்தான். எல்லாரும் இந்த அருளிலிருந்து விலகிவிடவும் மாட்டார்கள். எல்லாருமே நேர்வழியைப் பெற்று விடவுமாட்டார்கள் என்பதும் இயற்கைச் சட்டமாகும்.

இவ்வாறு திக்ர் மஜ்லிஸ் நடத்துகின்றனர். சில இடங்களில் சில அஹ்மதிகள் கூட இதுபோன்ற மஜ்லிஸ்களில் ஆர்வம் காட்டுவதாக எனக்கு புகார் வருகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சுன்னத்திலிருந்து விலகிச் செல்கின்ற எந்த வேலையும் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தர இயலாது. அல்லாஹ் என்று கூறுவது அல்லது மற்ற திக்ருகளை செய்து அல்லது பல்வேறு திக்ருகளைச் செய்வதற்காக நீண்ட மஜ்லிஸ்களை ஏற்படுத்தி திக்ர் செய்து விட்டு நமது கடமை நிறைவேறி விட்டது. இனி தொழுகை மற்றும் மற்ற அமல்களிலிருந்து நமக்கு விடுமுறை கிடைத்து விட்டது என்பது சரியன்று.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமக்கு கடின உழைப்பு, முயற்சி, கஷ்டங்களை சகித்துக் கொள்தல் ஆகிய அனைத்தும் தேவையில்லை என்று நினைக்கின்றனர்.

ஆனால் அல்லாஹ் திருக்குர்ஆனில் தெளிவாகக் கூறிவிட்டான்.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

இதிலிருந்து தெரிய வருவதாவது அல்லாஹ்வின் மஃரிபத்தின் வாசலைத் திறப்பதற்கு கடின உழைப்பு தேவை. கடின உழைப்பும் கூட அல்லாஹ் கூறிய வழியில் தான் செய்ய வேண்டும். அதனை செய்வதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரி இருக்கிறது.

மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரியை விட்டு விடுகின்றனர். அவர்கள் ஃபகீர்களிடம் செல்கின்றனர். அவர்களிடம் சென்று எங்களை ஓதி ஊதி எப்படியாவது ஒரு தகுதியை எங்களுக்கு வழங்கி விடுங்கள் என்று நினைக்கின்றனர். இது வீணானது. அவர்களோ ஷரீஅத் கட்டளையைப் பேணுவதில்லை. வீணான வாதம் செய்து கொண்டு ஆபத்தான பாவமும் செய்கின்றனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை விட தமது நிலையை உயர்த்த நினைக்கின்றனர். ஹிதாயத்தைக் கொடுப்பது அல்லாஹ்வுடைய வேலையாகும். ஆனால் மண்ணில் வீழ்ந்து கிடந்துகொண்டு தாம் ஹிதாயத் கொடுப்பதாக வாதிக்கின்றனர்.

இந்த பீர்கள் அல்லாஹ்வுக்குப் பதில் தாமே ஹிதாயத் கொடுப்பதாக கருதுகின்றனர். தஃவீஸ் முதலியவற்றை தந்து விட்டு உங்கள் பிரச்சனைகள் தீர்ந்து விட்டன. நீங்கள் நினைத்த காரியம் நடந்து விடும். நீங்கள் நன்மையில் நிலைபெற்று விட்டீர்கள் என்று கூறுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவர் உண்மையான உள்ளத்துடன் நல்ல நிய்யத்துடன் அவனது வழியைத் தேடுவார் எனில் அவருக்கு ஹிதாயத் மற்றும் மஃரிபத்தின் வழி திறந்து தரப்படுகிறது. இதனைக் குறித்து தான் இறைவன் கூறுகிறான்.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

இதில் நம் வழியில் முயற்சிப்பவர் என்பதன் பொருள், இக்லாஸ் மற்றும் நல்ல நிய்யத்தின் அடிப்படையில் இறைநேசத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர் ஆவார். எவர் பரிகாசம், எள்ளி நகையாடல் போன்ற செயல்களால் சோதித்துப் பார்க்க விரும்புகிறாரோ அவர் பேரிழந்தவராவார்.

எனவே இந்த தூய இலக்கணத்தின் அடிப்படையில் ஒருவர் உண்மையான உள்ளத்துடன் முயற்சி செய்து, துஆவும் செய்து வருவாரோ அந்த இறைவன் கஃபூருர் ரஹீம் – மன்னிப்பவனும் அன்புடையவனும் ஆவான்.

ஆனால் ஒருவர் இறைவனை பொருட்படுத்தவில்லை எனில் அவன் தேவையற்றவன் ஆவான். ஒவ்வொரு மேற்கோளுடனும் ஏதாவது அதிகப்படியான சில விஷயங்கள் உள்ளன. எனவே இதனை எடுத்துள்ளேன். நான் ஏற்கனவே கூறியது போன்று ஒருவருக்கு ஹிதாயத்தைக் கொடுப்பது அல்லாஹ்வுடைய வேலையாகும்.

எப்போதும் ஹிதாயத் அல்லாஹ்வின் தரப்பிலிருந்தே கிடைக்கிறது. ஒருவர் நான் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளேன் என்று வாதித்தால் அதன் உண்மை நிலையை அறிவதற்குக்கூட அல்லாஹ்விடமிருந்து வழிகாட்டல் பெறுவது அவசியமாகும். அதுவன்றி சந்தேகம் இருக்கும் அடையாளங்களால் திருப்தி ஏற்படாது. ஆனால் சிரிப்பு, ஏளனத்திற்கு உள்ளாக்கினால் பிறகு மனிதன் ஹிதாயத்திலிருந்து விலகி விடுகிறான். பிறகு மனிதன் விலகுவது மட்டுமின்றி இறைவனால் பிடிக்கப்படக் காரணமாகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் தனது மஃரிபத்தின் நிறத்தை வழங்க விரும்புகிறான்.

ஏனெனில் மனிதனை இறைவன் தனது உருவத்தில் படைத்துள்ளான்.

**திருக்குர்ஆனில் இறைவன் கூறுகின்றான்:**

**(முஸ்லிம்களே! நீங்கள் அவர்களிடம் கூறுவீர்களாக; நாங்கள்) அல்லாஹ்வின் மார்க்கத்தை ஏற்போம். அல்லாஹ்வை விடச் சிறந்த பண்புடையவன் எவன்? நாங்கள் அவனையே வணங்குகிறோம். (2:139)**

அல்லாஹ்வின் நிறத்தை – சாயலைப் பெறுவதற்கு மனிதன் முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் நெருக்கத்தைப் பெறும் வழி அப்போது அவனுக்கு தென்படுகிறது. ஸிப்கத்துல்லாஹ் என்பதன் பொருள் அல்லாஹ்வின் பண்புகளை ஒருவர் தன்னிடம் கொண்டு வர முயற்சி செய்தல் ஆகும்.

அல்லாஹ் கூறுவதன் பொருள் என்னவெனில் மனித இயல்பில் அல்லாஹ் ஒரு தகுதியை வைத்துள்ளான். அதன் மூலம் அவனால் இறை பண்புகளை கடைபிடிக்க முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஆதமை தனது வடிவத்தில் படைத்துள்ளான். வடிவம் என்பதன் பொருள் ஆதம் அல்லாஹ்வின் பண்புகளை கொண்டவராகப் பிறந்தார் என்பதாகும். இங்கு ஆதம் என்பது ஆதமின் மக்களாகிய மனிதர்களாகும். ஒவ்வொரு மனிதனையும் குறிக்கும். அல்லாஹ்வுடைய ஒவ்வொரு பண்பையும் உதாரணமாக அல்லாஹ் ஸத்தார் – குறைகளை மறைப்பவன் ஆவான். மனிதனும் அல்லாஹ்வுடைய இந்த பண்பிலிருந்து பயனடைந்தவாறு குறைகளை திரையிட வேண்டும்.

இறைவன் ஷுகூர் ஆக இருக்கிறான். மனிதனும் நன்றியுடையவனாக வேண்டும்.

அல்லாஹ்வைப் பற்றி ஷுகூர் என்று வருகிறது எனில் அவனோ எல்லா ஆற்றல்களும் உடையவன். எனினும் மனிதனது செயல்களுக்கு மதிப்பளிக்கின்றான். அல்லாஹ்வின் மிகப்பரந்த ஒரு பண்பு ரப்புல் ஆலமீன் என்பதாகும். எனவே ஒரு முஃமினும் தத்தமது வட்டத்தில் ரப் ஆக இருக்கின்றான். பெற்றோர்கள் குழந்தைகளை பராமரிக்கின்றனர். ஒரு குறுகிய வட்டத்திலும் அவர்களும் ரப் ஆக இருக்கின்றனர். இவ்வாறு மற்ற பண்புகள் உள்ளன. இவ்வாறு அல்லாஹ்வின் அழகிய பண்புகள் உள்ளன. அதனை மனதில்

கொண்டவாறு மனிதன் முயற்சி செய்யும் போது இறைவன் வழிகாட்டுகிறான். அவனது முயற்சியில் பரக்கத் ஏற்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவனில் தன்னை மாய்த்துக் கொண்டவாறு ஒருவர் முயற்சி செய்யும்போது இறைவன் கிடைத்து விடுகிறான். இறைவனிடம் ஆகியவாறு இறைவனைத் தேடுங்கள். களங்கமற்ற முறையில் அவனது பண்பை உங்களுடையதாக்குங்கள் என்பதாகும். அல்லாஹ் ரஹ்மான் மற்றும் ரஹீம் ஆவான். அவனது ரஹ்மத் எல்லா பொருளையும் சூழ்ந்துள்ளது. ஆனால் அல்லாஹ்வின் பக்கம் தம்மை சுட்டிக்காட்டியவாறு அவனது பெயரால் அநீதியிழைப்பவர் எவ்வாறு அவனைப் பெற முடியும்?

இன்று கூட நமக்கு ஒரு துயரமிக்க செய்தி கிடைத்தது. ஜுமுஆ நாளில் மர்தான் என்ற பகுதியிலுள்ள நமது மஸ்ஜிதில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்தனர். ஆனால் டியூட்டியில் இருந்த குத்தாம்களின் துரித நடவடிக்கையால் அவர்களின் விஷமம் அதிக அளவில் வெற்றி பெறவில்லை. உள்ளே அவர்களால் வர முடியாமல் போனது. கிரானைட் குண்டுகளை வீசினர். அவர்களே காயமும் அடைந்தனர். அதனால் மஸ்ஜிதின் நுழைவாயில், சுற்றுச் சுவர்கள் சேதமுற்றன. டியூட்டியில் இருந்த குத்தாம்களுள் சிலர் காயமுற்றனர். ஒரு காதிம் ஷஹீதாகியும் உள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அல்லாஹ் ஷஹீதின் தகுதியை உயர்த்துவானாக. காயமுற்றவர்களுக்கு குணமளிப்பானாக. இன்னும் சில தாக்குதல் தொடுத்தவர்கள் ஓடிவிட்டனர். இவர்களின் நோக்கம் என்ன? இறைவனின் பெயரால் இஸ்லாத்தின் பெயரால் செய்கிறார்கள். நாம் அல்லாஹ்வின் பண்பை மேற்கொள்பவர் என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வை வணங்குபவர்களை தாக்குகின்றனர். இவர்களை அல்லாஹ்வுக்குரியவர்கள் என்று எப்படி கூற முடியும்?

சில நாட்களுக்கு முன்னர் இன்னோரிடத்தில் தாக்குதல் தொடுத்தனர். அதிலும் அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டன. பலர் காயமுற்றனர். இவர்களின் உள்ளங்களை அல்லாஹ் எந்த அளவுக்கு கோணலாக்கி விட்டான் எனில் இவர்கள் திரும்புவதறகு எந்த வழியுமில்லை. இவர்களுக்கு உதவி செய்து கொண்டு நேரடியாக இறங்காமல் இருக்கும் சிலரும்கூட இதற்கு பொறுப்பாளிகளே ஆவர். இந்த அநியாயக்காரர்களிடமிருந்து அல்லாஹ் விரைவில் இந்த நாட்டை விடுவிப்பானாக! மேலும் உலகையும் கூட இந்த அநியாயக்காரர்களிடமிருந்து காப்பாற்றுவானாக! இவர்கள் உலகம் முழுவதும் பரவியுள்ளனர்.

அல்லாஹ்வைப் பெறுவதற்கு செய்யும் முயற்சிக்கு **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** ஓர் உதாரணம் மூலம் விளக்குகின்றார்கள்:

முயற்சி செய்பவர்கள் நன்முடிவை அடைகின்றனர். ஒரு தானியத்தை நிலத்தில் நட்ட பிறகு அதற்கு நீர்ப்பாசனம் செய்யா விட்டால் தானே அழிந்து விடும். அதேபோன்று நீங்களும் ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வை தினமும் நினைவில் கொள்ளவில்லை என்றால் அடைக்கலம் தேடவில்லை என்றால் இறைவனே எனக்கு உதவி செய்வாயாக என்று கேட்கவில்லை என்றால் இறை உதவி கிடைக்காது. இறை உதவியின்றி மாற்றம் ஏற்படுவது சாத்தியமேயில்லை. விதை தான் மாய்ந்த பிறகு தான் செடியாக முளைக்கிறது. நீங்கள் பழங்களாக மாற விரும்புகின்றீர்கள் எனில் இறை திருப்தியைப் பெற விரும்புகிறீர்கள் எனில் உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ளுங்கள். அப்போது தான் வருங்கால சந்ததிகளிடம் இந்த ரூஹ் நிலைநிற்கும். இது ஒரு தற்காலிக முயற்சியன்று. நிரந்தர முயற்சியாகும். அதன் மூலமே ஒரு செடி பழம் தருகின்ற மரமாகிறது.

காலத்தின் இமாமோடு நீங்கள் செய்த உடன்படிக்கை இறைவனோடு செய்த வாக்குறுதியை கவனத்தில் கொள்ளவில்லை எனில் வெற்றியும் இல்லை. நீங்கள் அந்த உடன்படிக்கையை கவனத்தில் கொள்ளும்போதுதான் வெற்றியும் கிடைக்கிறது.

இன்னோரிடத்தில் இதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருபுறம் இறைவன் தனது கண்ணியம், நுட்பமான ஞானம், கருணை, தயை போன்றவற்றை தனது வேதத்தில் சுட்டிக் காட்டுவதைப் பார்க்கிறோம். தன்னை ரஹ்மான் என்று கூறுகிறான். **மறுபுறம் கூறுகிறான். மனிதன் என்ன முயற்சி செய்கின்றானோ அதுவே கிடைக்கிறது. (53:40)**

மேலும் கூறுகின்றான்: **எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

மேலும் இதற்கு மிகச் சிறந்த முன்மாதரி சஹாபாக்களின் உயர்ந்த முன்மாதிரியாகும். சஹாபாக்கள் ரலியல்லாஹூ அன்ஹும் சாதாரண தொழுகைகளால் இந்தத் தகுதியினைப் பெற்றுவிட்டார்களா என்ன?

அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தனது உயிரையும் கூட பொருட்படுத்தவில்லை. ஆடு, மாடு போன்று இறைவழியில் தியாகம் செய்தார்கள். அதன் பிறகு தான் அவர்களுக்கு அப்பெரும் பதவி கிடைத்தது. இந்நிலையில் நாம் ஒருமுறை ஓதி ஊதுவதனால் நம்மை நல்லவர்களாக்கி அர்ஷ் வரை கொண்டு போய் விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட பெரியவர் எவரிருக்க முடியும்? அவர் மனிதர்களுள் சிறந்தவர். நபிமார்களுள் சிறந்தவர். அவர்கள் கூட இவ்வாறு செய்யவில்லை. பிறகு வேறு எவர் அவ்வாறு செய்ய முடியும்? பாருங்கள். ஹிரா குகையில் எத்தனை எத்தனை துன்பங்களைச் சகித்தனர். எவ்வளவு காலம் உருகினர்! ஏங்கினர்!

மனத்தூய்மை பெறுவதற்காக என்னென்ன உழைப்புகளை செய்தார்கள். பிறகு தான் இறைவன் புறமிருந்து அருள்கள் இறங்கின. அசல் விஷயம் என்னவெனில் இறைவழியில் ஒருவர் தன்னிடம் ஒரு மரணத்தை ஏற்கவில்லை என்றால் அவரைப் பற்றி அவன் புறமிருந்து பொருட்படுத்தப்படாது. ஒருவர் இறைவனை அடைவதற்காக முழுமையாக முயற்சி செய்து தன்னிடத்தில் ஒரு மரணத்தையே ஏற்றுக் கொண்டு விட்டார் எனில் இறைவன் காணும் போது அவ்விறைவன் அம்மனிதர் மீது தானே தன்னை வெளிக்காட்டுகின்றான். தனது அருளால் அவரை உயர்த்துகின்றான்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவழியில் முயற்சி செய்பவர் ஒருபோதும் வீணாகமாட்டார். ஏனெனில் அவனது வாக்குறுதி உண்மையானது. அவன் கூறுகின்றான்: **எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கிறான். (29:70)**

இறை வழியில் முயற்சி செய்பவர் தனது இறுதி எல்லையைத் தொட்டு, உலக தேர்வுகளின் போது இரவுகளைப் பகலாக்கும் முயற்சி செய்யக்கூடிய மாணவர்களின் உழைப்புகளைப் பார்த்து நாம் இரக்கப்படுகிறோம். ஆனால் இறைவனுடைய கருணையும் அருளும் அளவற்றது. அவன் தன்புறம் வருபவர்களை வீணாக்குவானா? ஒருபோதும் அவ்வாறு வீணாக்கிவிடமாட்டான்.

அல்லாஹ் எவரது உழைப்பையும் வீணாக்குவதில்லை. பிறகு ஈமானில் நிலைபெறுவதற்கும் இறைநெருக்கத்தைப் பெறுவதற்கும் உள்ள நுட்பமான வித்தியாசத்தைப் பற்றி விரிவாக விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

ரூஹுல் குத்ஸ் –ன் ஆதரவு ஒரு முஃமினுக்கு கிடைக்கிறது எனில் அது அல்லாஹ்வின் ஒரு வெகுமதியாகும். உண்மையான உள்ளத்துடன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆனின் மீதும் ஈமான் கொள்பவருக்கு கிடைக்கிறது. இது முயற்சியினால் அல்ல. ஈமானால் கிடைக்கிறது. இதற்கு அவரது

ஈமான் உண்மையானதாக இருக்க வேண்டும். அதுவே நிபந்தனையாகும். மேலும் சோதனைகளின் போது பொறுமையை மேற்கொள்ள வேண்டும். இறைவனது நுட்பமான வழிகாட்டல் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். (29:70)**

வெறும் முயற்சியினால் அல்ல. ஒரு விஷயம் இறைவன் புறமிருந்து கிடைக்கிறது. இன்னொன்று சிறப்பான முயற்சியால் கிடைக்கிறது. வெறும் முயற்சி செய்பவர் குருடராவார். சாதாரண ஈமானால், சிறப்பான உழைப்பின்றி கிடைக்கிறது எனில் அவரது நிலை ஒரு குருடரின் நிலையாகும். மிக உயரிய நிலையை அவர் பெற வேண்டியுள்ளது.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவருக்கும் ஃபீனா (நம்மில் ஆகிவிடுதல்) என்ற நிலை அடைவதற்கும் இடையில் மிகவும் இடைவெளி உள்ளது.

ரூஹுல் குத்ஸின் ஆதரவால் அவருக்கு ஒரு நல்லெண்ணம் உருவாகிறது. அவருக்கு ரூஹுல் குத்ஸ் ஓர் ஆற்றலை வழங்குகின்றது. அவர் கடின உழைப்பின் பக்கம் கவரப்படுகிறார். அதாவது அவர் முயற்சி செய்து கொண்டே செல்வதற்கு இறைவனிடமிருந்து ஓர் ஆற்றல் கிடைக்கிறது. அதன் மூலம் மனிதனுக்கு இன்னொரு ரூஹ் கிடைக்கிறது. இது முதல் ரூஹ் –ஐ விட மிகவும் வலுவானது. அதற்காக இரண்டு ரூஹ் –கள் உள்ளன என்று பொருளல்ல. ரூஹ் ஒன்றுதான். ஆற்றலின் படித்தரங்களில் தான் வித்தியாசம் உள்ளது. முதல் படித்தரத்தில் சற்று குறைந்த ஆற்றலும் உயர்ந்த படித்தரத்தில் செல்லும் போது ஆற்றல் அதிகரிக்கின்றது. அதிக தகுதியைப் பெறும் போது இறைவனைப் பற்றிய மிக நன்றாக உணர்தல் கிடைக்கிறது. புதிய புதிய வழிகளின் பக்கம் வழிகாட்டல் கிடைக்கிறது. இறைவன் இரண்டில்லை. ஒருவன் தான் என்பதைப் போன்றே மற்றவர்களுக்கு கிடைக்காத அசாதாரண ஆற்றல்களை அம்மக்களுக்கு காட்டுகின்றான். மற்றவர்களுக்கு இந்த அசாதாரண அற்புதங்களை ஒருபோதும் காட்டுவதில்லை. இது அந்த வல்லமைமிக்க இறைவனது உதவியாகும். அது மட்டுமல்ல; அசாதாரண அற்புதங்களையும் காட்டுகின்றான்.

மேலும் கூறுகிறான்: எவர் அல்லாஹ்வின் பக்கம் திரும்புகிறாரோ அவர் பக்கம் அல்லாஹ்வும் திரும்புகிறான். மனிதன் தன்னால் முடிந்தவரை தவறு செய்யாமல் இருக்க வேண்டும். முயற்சி எல்லையைத் தொடும் போது இறைவனது ஒளியைப் பார்ப்பார். இதனை குறித்துதான் இறைவன் **எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம் (29:70)** என்று கூறுகிறான்.

முயற்சி செய்ய வேண்டிய அளவுக்கு செய்ய வேண்டும். 20 அடி தூரத்தில் தண்ணீர் இருக்கும் போது ஓரிரு அடி தோண்டி விட்டு தைரியம் இழந்தவர் போன்று ஆகிவிடக் கூடாது. இதுவே வெற்றியின் ரகசியமாகும். ஒருபோதும் தைரியம் இழக்கக் கூடாது. பிறகு இந்த உம்மத்திற்காக அல்லாஹ் வாக்களித்துள்ளான். ஒருவர் முழுமையாக அவன் வழியில் மனத்தூய்மை மற்றும் துஆவை பயன்படுத்தும்போது குர்ஆனில் கூறப்பட்ட அவனது எல்லா வாக்குறுதிகளும் அவருக்காக நிறைவேற்றப்படுகிறது. எவர் இதற்கு மாறு செய்வாரோ அந்நிலையில் இறைவனிடம் ஒரு ரோஷம் உள்ளது. ஏனெனில் அவனை சென்றடையும் வாசலை இறைவன் நிச்சயமாக வைத்துள்ளான். எனினும் அதன் வாசலை மிகவும் குறுகலாக வைத்துள்ளான். கசப்பான பானத்தை அருந்துபவரே அதன் வாசலை அடைகிறார். மக்கள் உலகிற்காக கஷ்டங்களை சகித்துக் கொள்கின்றனர். சிலர் அதிலேயே மரித்தும் போகின்றனர். ஆனால் அல்லாஹ்வுக்காக ஒரு முள் குத்தும் அளவுக்கு வலியைக் கூட பொறுக்காதவர், உண்மை மற்றும் விசுவாசத்தின் அறிகுறி சோதனை காலத்தில் வெளிப்படாத போது ரஹ்மத்தின் அறிகுறி அவருக்காக எப்படி வெளிப்படும்? எனவே இதன் பக்கம் கவனம்

செலுத்தியவாறு தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். அதுவே ஒரு முஃமினின் வேலையாகும். இஸ்லாம் மற்றும் மற்ற மார்க்கங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசம் இதுவே ஆகும். இஸ்லாம் உண்மையான ஞானத்தை வழங்குகின்றது. அதனால் பாவம் தோய்ந்த அளவிற்கு ஒரு மரணம் ஏற்படுகிறது. அவருக்கு ஒரு புதிய வாழ்வே வழங்கப்படுகிறது. அது சொர்க்க வாழ்வு ஆகும். இரண்டு வாழ்வுக்கும் இடையில் அவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்குமெனில் ஏன் ஒவ்வொருவரும் அதனை பார்க்க முடியவில்லையே என்று கேட்டால் பதில் இதுதான்.

இறைவனது சுன்னத் அவ்வாறுதான் நிகழ்கிறது. முஜாஹிதா – கடின உழைப்பு, கழிவிரக்கம், தனிமையின்றி கிடைப்பதில்லை. ஏனெனில் இறைவன் கூறுகிறான்: **எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். (29:70)**

இறைவனது போதனையை அமல் செய்யாமல் புறக்கணித்து விட்டால் இறைவனின வாசல் எப்படி திறக்கும்? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சஹாபாக்கள் ரூஹுல் குத்ஸினால் வழிகாட்டப்பட்டு தனது தூய அமல்களால் ஷய்த்தானை வெற்றி கொண்டு, மேலும் கடின உழைப்பின் மூலம் இறைவனை திருப்திப்படுத்த முயன்றனர். அவர்களை விட அதிகமாக உழைப்பதை மனிதன் கற்பனைகூட செய்ய முடியாது. தமது உயிரையும் இம்மியளவும் பொருட்படுத்தாத போது இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். பிறகு அல்லாஹ் பாவங்களிலிருந்து முற்றிலும் விழிப்புணர்வை வழங்கினான். நன்மையின் மீது அன்பை பொழிந்தான். இதனை இறைவன் இவ்வாறு கூறுகிறான்:

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். (29:70)**

இந்த கடின உழைப்பினால் சஹாபாக்களுக்கு கிடைத்த தகுதி குறித்து ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய அறிவிப்பில், நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறக்கேட்டேன். **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எமது சஹாபாக்களின் பல்வேறு கருத்துகளைப் பற்றி நான் அல்லாஹ்விடம் கேட்ட போது இறைவன் எனக்கு வஹி அறிவித்தான். எனது அன்பிற்குரிய முஹம்மதே! (ஸல்) உனது சஹாபாக்களுடைய தகுதி என்னிடத்தில் வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போன்றது. அவற்றுள் சில பிரகாசம் கொண்டு பளிச்சிடுகின்றன. ஆனால் ஒவ்வொரு நட்சத்திரத்திலும் ஒளியே உள்ளது. எனவே என் கருத்தின்படி ஒரு சஹாபியைப் பின்பற்றி வரக்கூடியவர் நேர்வழி பெறுவார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இன்னொரு விஷயமும் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள். எனது சஹாபாக்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழி பெறுவீர்கள். எனவே தொடர்ந்து கூறினார்கள். கடின உழைப்பை சஹாபாக்கள் தமது நஃப்ஸை தூய்மைப்படுத்துவதற்காக செய்தார்கள். அதன் பிறகே அல்லாஹ் இந்த கூலியை வழங்கினான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பைஅத்தின் அசல் நோக்கம் இறைவன் மீது கொண்ட நேசத்தில் ஓர் உத்வேகம் உருவாக்குவதாகும். பாவத்தின்மீது வெறுப்பை உருவாக்கி அதன் இடத்தில் நன்மைகளை உருவாக்கி விடுவதாகும். இந்த நோக்கத்தை கவனத்தில் கொள்ளாமல் பைஅத்திற்குப் பிறகு தன்னிடத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தாதவர் – முயற்சி செய்ய வேண்டிய அளவுக்கு செய்யாதவர் – துஆ செய்ய வேண்டிய அளவுக்கு துஆ செய்யாதவர் இறைவனிடம் செய்த உடன்படிக்கைக்கு பெரும் அவமரியாதை செய்தவர் ஆவார். அவர் பெரும் பாவியும் தண்டனைக்குரியவரும் ஆவார்.

எனவே பைஅத் உடன்படிக்கையை சொன்னாலே நமக்கு போதுமானது. நாம் முயற்சி செய்யத் தேவையில்லை என்று ஒருபோதும் கருதக்கூடாது.

எவர் தட்டுகின்றாரோ அவருக்கே வாசல் திறக்கப்படும். திருக்குர்ஆனும் இதனைப் பற்றியே கூறுகிறது.

**எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். (29:70)**

எனவே அவரை சிராத்தல்முஸ்தகீமில் நடக்க வைக்கிறோம். ஆனால் எவர் முயற்சியே செய்வதில்லையே அவர் எப்படி இவ்வழியைப் பெற முடியும்? வெற்றி ஈடேற்றத்தின் இரகசியம் இதுவேயாகும். மனிதன் இறைவழியல் முயற்சி செய்வதில் சோர்வடையவே கூடாது. பலவீனம் காட்டவும் கூடாது.

நம்மில் ஒவ்வொருவரும் இந்த ரூஹை புரிவோமாக. நமது முயற்சிகள் ஒவ்வொரு நொடியும் முன்னோக்கியே செல்லட்டுமாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றி அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதன் பக்கம் கவனம் செலுத்துவோமாக. நமது உடன்படிக்கையில் பலவீனம் காட்டும் முயற்சியை குறைத்து அல்லாஹ்வின் முன்னிலையில் வெட்கத்திற்குரியவர் ஆகாதிருப்போமாக.

அல்லாஹ் நமது உடன்படிக்கையை நிறைவேற்றி இறை திருப்தியைப் பெறச் செய்வானாக. எஞ்சியிருக்கிற நாட்களில் நாம் நமது துஆவில் மூழ்கிக் கிடப்போமாக. அல்லாஹ் தானே நமக்கு கேடயமாகி விடுவானாக. நமது எதிரிகளைப் பிடிப்பானாக.

ஷஹீது பற்றி கூறினேன். அவரைப் பற்றி தகவல்கள் அடுத்த வாரம்தான் கிடைக்கும் என்று நினைத்தேன். ஆனால் அவரைப் பற்றி எல்லா விபரங்களும் வந்து விட்டன. அவரது ஜனாஸா காயிப் ஜுமுஆவுக்குப் பிறகு தொழுவோம்.

இவரது பெயர் சேக் ஹாமிர் ரஸா சாஹிப். இவர் ஷஹீதாகியுள்ளார். முஸ்தாக் அஹ்மத் சாஹிபின் மகன் ஆவார். இவரது வயது 40. வக்ஃபே ஜதீத் செயலராக சேவை செய்தார். அதுவன்றி மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் மற்றும் மாவட்ட காயித் ஆகவும் பணியாற்றி இருந்தார். Electronic Business செய்து வந்தார். தாக்குதலில் சுவர் இடிந்து விழுந்ததில் உள் காயம் ஏற்பட்டிருந்தது. இவர் உள்ளே இருந்தார். வெளியே காயம் தெரியவில்லை. மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே மரணித்துவிட்டார். நல்ல தூய இயல்பு கொண்டவர். உழைப்பாளி; இவரது மகள் லுப்னா அமிர் சாஹிபா, மகன் உசாமா அமிர் – 9 வயது, இன்னொரு மகளுக்கு ஒன்றரை வயது ஆகிறது. இவரது ஜனாஸா ரப்வாவுக்கு சென்று நல்லடக்கம் செய்யப்படும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஜுமுஆவுக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழப்படும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON ON 03.09.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**